உறுப்பினர்கள் கேட்பதற்கெல்லாம் சேர்த்து நாளைக்கு அவர் பதில் சொல்லிவிடுவார். ஆகவே, இன்றைக்கு இந்தக் கேள்வியை இதோடு முடித்துக்கொள்ளலாம்.

வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

187—

அடிப்படை வசதிகள்

***9383—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கீழ்நாடு ஊராட்சி, நாகலூர் பெரியகல்வராயன் மலையில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள் ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கீழ்நாடு ஊராட்சி, நாகலூர் பெரியகல்வராயன் மலையில் உள்ள நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்றேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலத்திலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவில் நாகலூர் அருவி அமைந்துள்ளது. சேலம்—வாழப்பாடி—தும்பல்—கருப்பந்துறை—பகுடுப்பட்டு—குன்னூர்—நாகலூர் உள்ளடக்கிய

2018 ஜூன் 13]

பகுதியாகும். நாகலூர் அருவிக்குச் செல்ல கருமந்துறையிலிருந்து நாகலூர் வரை போதிய பேருந்து வசதிகள் இல்லை. மேலும், நாகலூர் அருவியாக இல்லாமல் நீரோடையாக மட்டுமே உள்ளது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதி வனத் துறைக்கு உட்பட்ட பகுதியாகும். மேற்குறிப்பிட்ட 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை வசதி இல்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்கள். நாகலூர் ஓடைக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளோ மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளோ வருகைபுரிவதும் இல்லை. இங்குள்ள உள்ளூர் கிராம மக்கள் மட்டுமே இந்நீரோடையைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, இவ்விடத்தில் அடிப்படை வசதிகள் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.*

திரு. ஆர்.எம். சின்னதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவின் இலட்சிய தேரில், புரட்சித் தலைவரின் கொள்கைகளுக்கு புகழ் சேர்த்து, தமிழகத்து மக்களுக்காகவே தன்னலம் பாராமல் மெழுகுவர்த்தியாக தன்னை வருத்திக்கொண்டு, 'தமிழகமே என் வீடு, தமிழக மக்களே என் பிள்ளைகள்' என தவ வாழ்க்கை வாழ்ந்து, தமிழகத்தை முன்னேற்றிய தங்கத் தாரகையே, எங்களின் இதயத் துடிப்பே, எங்களின் உயிர் மூச்சே, அம்மா தாங்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன் தாயே.*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையில், தொடர்ந்து எதிர்க்கட்சிக்காரர்கள் கொடுத்த சோதனைகளையெல்லாம் சாதனைகளாக மாற்றிக் காட்டி சரித்திரம் படைத்தவரும், குடிமராமத்து என்னும் திட்டத்தை அறிவித்து, சாதனை படைத்திட்ட விவசாயிகளின் நம்பிக்கை நட்சத்திரமும், நல்லாட்சி நடத்தி வரும் மாங்கனி மாவட்டத்தின் மண்ணின் மைந்தருமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கியும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களை வணங்கியும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்கியும் எனது கேள்வியைத் தொடங்குகிறேன்.

[2018 ஜூன் 13

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, கீழ்நாடு ஊராட்சியில், கல்வராயன் மலையில் உள்ள மிகப் பெரிய நீர்வீழ்ச்சியில் சுமார் 500 மீட்டர் உயரத்திலிருந்து அருவியாக நீர் கொட்டுகிறது. இந்த நீர்வீழ்ச்சிக்கு செல்ல பாதை இல்லாத காரணத்தால், அருகே யாரும் செல்ல முடியவில்லை. ஆனால், மழைக் காலங்களில் அருவியில் சென்று குளிக்க முடியாததால், பொதுமக்கள் அருவியைப் பார்த்துவிட்டு மட்டும் செல்கின்றார்கள். இரண்டு நாள் மழைபெய்தால்கூட தொடர்ந்து மூன்று மாதம் அருவியில் நீர் கொட்டும். ஆகவே, அங்கு சாலை வசதி, உணவு அருந்துவதற்கான இடம், உடைகளை மாற்றுவதற்கான இடம் ஆகியவற்றை அமைத்துத் தருதல், Winch அமைத்துத் தருதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, அந்த இடமானது வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. வனத் துறையிடமிருந்து அனுமதி பெற்று, அந்த இடத்தைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து வனத் துறை அலுவலர்களிடம் தொடர்புகொண்டு, அந்த இடத்தை அளிக்க முடியுமா என்பதற்கான கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுற்றுலாத் துறை மிகவும் சீரோடும் சிறப்போடும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற வேளையில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கீழ்க்காணும் கோரிக்கையைக் கொண்டுவர விரும்புகிறேன்:

2018 ஜூன் 13]

கடந்த 2013–2014 ஆம் ஆண்டு காலத்தில், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் அவர்களும் ஒரு நாள் அந்த நீர் வீழ்ச்சியை நேரில் சென்று பார்த்து வந்தார்கள். பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான அந்த நீர்வீழ்ச்சியைக் கண்டு களித்து, நீராடவும், உணவு அருந்துவதற்கான இடம், உடைகளை மாற்றுவதற்கான இடம் மற்றும் winch ஆகியவற்றை அமைத்துத் தரவும் ஆவன செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சி, முட்டல் ஏரி தற்போது சுற்றுலாத் தலமாக விளங்கிவருகிறது. கல்வராயன் மலையில் இருந்து 100 மீட்டர் உயரத்தில் ஆணைவாரி மடுவு நீர்வீழ்ச்சியில் நீர் கொட்டுகிறது. இங்கு வந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தினமும் அருவியில் நீராடி வருகிறார்கள். நீர்வீழ்ச்சி என்றாலே மலைகளிலேதான் வரும். இந்த முட்டல் ஏரிக்கும் ஆணைவாரி மடுவு நீர்வீழ்ச்சிக்கும் இடையேயுள்ள 3 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியும், உணவு அருந்துவதற்கான இடம், உடைகளை மாற்றுவதற்கான இடம் போன்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் அவர்கள், ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சி, முட்டல் ஏரி தற்சமயம் சுற்றுலாத் தலமாக உள்ளது என்றும், அங்கு படகு சவாரி நடத்தப்பட்டு வருகின்றது என்றும், அந்தப் பகுதியிலே படகு சவாரி நடத்துகின்ற காரணத்தினாலே, சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும், அந்தப் படகு சவாரி போக்குவரத்தின் காரணமாக நல்லதொரு வருவாய் ஈட்டக்கூடிய சூழல் இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

[2018 ஜூன் 13

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *ஆணைவாரி மடுவிலிருந்து அந்த ஏரிக்கு நீர் வருகிறது. 3 கி.மீ. மண் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்றும், அங்கு குளிப்பதற்கும், உடை மாற்றுவதற்கும், உறைவிட கூடமும், உணவருந்தும் கூடமும் அமைத்துத் தர வேண்டுமென்றும் கோரியிருக்கிறார். ஆனால், அவர் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பகுதிகளும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தால், வனத் துறை அங்கே படகு சவாரி நடத்தாது. அப்படி நடத்துவதாக இருந்து, அதை சுற்றுலாத் துறை வசம் ஒப்படைப்பார்களேயானால், சுற்றுலாத் துறை அதை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்த வசதிகளை உருவாக்குவதற்கு நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். எனது கவனத்திற்கு வந்துவிட்டது. நடவடிக்கை எடுக்கிறேன்.*

வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

188—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்

***244—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?